12-07-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சமூக மாற்றத்திற்கான பாதையில் பிரக்ஞையின் முக்கியத்துவம்.**

**தொடக்கவுரையாடல் : மீராபாரதி**

மீராபாரதி அவர்கள் தான் தொடர்ச்சியாகப் பேசிவரும் "பிரக்ஞை" என்ற எண்ணக்கரு பற்றிய விளக்கத்தை இந்த உரையாடலில் அளிக்க முனைந்தார்.

அவர் முன்வைத்த கருத்துக்கள் வருமாறு :

பெண் விடுதலை குறித்து எழுதப்படும் ஆக்கங்களில் ஆணாதிக்கச் சொற்களும் மனநிலையும் வந்துவிடுவதும், சாதி ஒழிப்புப்பற்றிய கட்டுரையில் சாதித் தடிப்புக்கொண்ட வார்த்தைகள் பயன்படுத்தப்படுவதும் பிரக்ஞை இன்மையின் விளைவுகளே.

அரசியல் செயற்பாடுகள், இயக்கங்கள் போன்றவற்றின் பிரக்ஞையின்மையே அவ்வியக்கங்கள் நாளடைவில் தடம் மாறுவதற்கும் சிதைந்து போவதற்கும் காரணமாகிறது.

நாம் இதுவரை புரிந்திருக்கின்ற ஆன்மீகம் என்பது மதஅடிப்படையிலானது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே கட்டமைக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் இன்னுமொரு ஆன்மீகம் இருக்கின்றது. அது ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி அறிகின்றமையை அல்லது புரிந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டது. இது வெறுமனே நம்பிக்கையின் அடிப்படையிலானதல்ல. மாறாக அது சுயஅனுபவத்தினூடான புரிதல் மற்றும் அறிதலாகும். இவ்வாறன நம்மைப் பற்றிய, அதாவது நமது உடல், மூச்சு, சக்தி, காமம், மனம்... என்பன தொடர்பான, அறிதலும் புரிதலும் மிகவும் மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் என்றால் மிகையல்ல. அதுவும் சமூகமாற்றம் தொடர்பாக சிந்திப்பவர்களுக்கும் செயற்படுகின்றவர்களும் தவிர்க்கமுடியாது கவனிக்கவும் அக்கறை கொள்ளவும் வேண்டிய ஒரு விடயம் இது.

மனிதர்களாகிய நாம் நமது எண்ணங்களையும் சிந்தனைகளையும் சமூகத்திலிருந்து பெற்றுக் கொள்கின்றோம் என்பதில் எந்த முரண்பாடும் இல்லை. இவ்வாறன கருத்துக்கள் ஒரு மனிதர் பிறந்த பின் மட்டும் அவருக்குள் உருவானதல்ல. பிறக்கின்றபோதே நமது பெற்றோர்கள், முதாதையர்கள், இனம், மதம், சாதி, மற்றும் வர்க்கம் எனப் பலவற்றின் கருத்துக்கைளயும் சுமந்துதான் வருகின்றோம். அல்லது பிறந்தபின் நம்மையறியாமலே நமக்குள் ஏற்றப்பட்டுவிடுகின்றன. இதன்பின் ஒவ்வொரு மனிதர்களும் அவர்கள் சார்ந்த ஆதிக்க சமூகத்தின் கருத்துக்களுடன் தம்மை அடையாளப்படுத்துவதுடன் அதை சுமந்தும் திரிகின்றனர்.

இந்தக் கருத்துக்களை இவ்வாறு சுமந்து திரிவது மட்டுமல்ல, நமது அபிப்பிராயங்களை கருத்துக்களை முன்வைக்கும் பொழுதோ அல்லது எதிர்வினையாற்றும் பொழுதோ எங்களது சொற்களில், வசனங்களில், கருத்துக்களில் அவை எங்களையும் அறியாமல் பிரக்ஞையின்மையாக வெளிப்படுகின்றன.

இதனால்தான் நம்மையும் அறியாது நமது இனவாத, மதவாத, ஆணாதிக்க மற்றும் பிற்போக்குக் கருத்துக்களை பிரக்ஞையின்மையாக வெளிப்படுத்துகின்றோம். பல்வேறு சந்தர்ப்பங்களில் இதுவே கூட்டுப்பிரக்ஞையின்மையாகவும் வெளிப்படுகின்றன.

இவ்வாறுதான் பாரம்பரிய மார்க்சியம் கதைப்பவர்களும் அவர்களை அறியாது நூற்றாண்டுகளுக்கு முன்பு கூறிய அதே கருத்துக்களை எந்தவிதமான சமூக மற்றும் விமர்சனப் பார்வைகளுமற்றும், அதை அப்படியே நம்பிக்கொண்டும், பிரக்ஞையின்மையாகவும், கிளிப்பிள்ளைகள் போலவும் மீளவும் முன்வைக்கின்றனர்.

**மிகுதி அடுத்த பக்கம்**



நெல்சன் மண்டேலா

நெல்சன் மண்டேலா (Nelson Rolihlahla Mandela, பிறப்பு: ஜூலை 18, 1918), தென்னாப்பிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் ஆவார்.

அதற்கு முன்னர் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்தார். தொடக்கத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பிறகு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். இவர்கள் மரபுசாரா கெரில்லாப் போர்முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர்.

மண்டேலாவின் 27 ஆண்டு சிறைவாசம், நிறவெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது. சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் கழித்தார். 1990 இல் அவரது விடுதலைக்கு பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாப்பிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா, உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக விளங்குகிறார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

**சமூக மாற்றத்திற்கான பாதையில் பிரக்ஞையின் முக்கியத்துவம்.**

முன்பக்கத் தொடர்ச்சி..

மேற்கூறப்பட்ட பின்னையவர்களது கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் காரணமாகத்தான், சமூகத்தை மாற்ற புறப்பட்டவர்களுடனான முரண்பாடு ஆரம்பிக்கின்றது. சாதாரண மனிதர்கள் மட்டுமல்ல தேசியவாதிகள் கூட பிரக்ஞையின்மையாக கதைப்பதிலோ, செயற்படுவதிலோ அல்லது தன்முனைப்பு, போட்டி, பொறாமை என்பவற்றில் ஈடுபடுவதிலோ ஆட்சேபனை இல்லை. அவர்களைப் புரிந்துகொள்ளலாம். ஆனால் சமூகத்தை மாற்றப் புறப்பட்டவர்கள், தம்மை முன்னேறிய பிரிவினர்கள் எனக் கூறுகின்றவர்கள் பிரக்ஞையின்மையாக செயற்படுவதுடனும், மற்றும் தன்முனைப்பு, போட்டி, பொறாமை, வன்முறை மற்றும் கையாளுதல் என்பவற்றில் ஈடுபடுவதுடன்தான் உடன்பட முடிவதில்லை. இது ஏற்றுக்கொள்ளவும் முடியாத ஒன்று. இவர்களது நல்லெண்ணங்களைப் புரிந்துகொள்ளலாம். அதற்கான அவர்களது செயற்பாடுகளை மதிக்கலாம். ஆனால் உடன்படவோ ஆதரவளிக்கவோ முடியாது. ஏனெனில் இவர்கள் தாம் பிரக்ஞையின்மையாக செயற்படுகின்றவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளாதது மட்டுமல்ல பிரக்ஞைபூர்வமான செயற்பாடு என்பதை வெறுமனே தர்க்க மற்றும் பகுத்தறிவு அடிப்படையிலான தெரிவாகவே முன்வைக்கின்றனர். அல்லது தம்மைப் பற்றிய புரிதலுக்கான செயற்பாடு என்பது ஆன்மிகம் என வரையறுத்துப் புறக்கணித்துவிடுகின்றனர். ஆனால் உண்மையிலையே பிரக்ஞை என்பது இவ்வாறன புரிதல்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று. ஏனெனில் நாம் இவ்வாறு தெரிவு செய்கின்ற ஒரு சொல்லின் வரலாற்றையும் அதன் பன்முகப் பரிமாணங்களைப் நமக்குப் புரியவைப்பது பிரக்ஞை. மற்றும் நமது தன்முனைப்பு, போட்டிமனப்பான்மை, கையாளுதல் வன்முறை என்பவற்றையும் நமக்கு உணர்த்தி நிற்பதுவும் பிரக்ஞை எனலாம்.

பிரக்ஞையை வரைவிலக்கணம் செய்வது என்பது பாரிய பிரச்சனை. ஏனெனில் பிரக்ஞையை ஒருவர் தனது அனுபவத்தினுடாகவே புரிந்துகொள்ளலாம். ஆகவே ஒவ்வொருவருக்கும் அதுவேறுபடுகின்றது. இதனால்தான் பிரக்ஞையை உறுதியாக இதுதான் என பொதுவான வரையறை ஒன்றைச் செய்யமுடியாதுள்ளது.


உரையாடலின்போது முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு :

பிரக்ஞைபூர்வமாக செய்யப்படும் செயற்பாடுகள் வெற்றியளிக்கும் என்பதும் பிரக்ஞை நல்லவிடயம் என்பது சரி, ஆனால் கொள்ளையடிக்கும் செயற்பாடும் கூட பிரக்ஞையை வேண்டி நிற்கிறது. இதில் நல்ல பிரக்ஞை எது கெட்ட பிரக்ஞை எது என்பதை எப்படித் தீர்மானிப்பது?

மனிதர்களுக்குள் காலகாலமாக விதைக்கப்பட்ட பிற்போக்கான எண்ணங்களை மாற்றமடைவதற்கு தனித்தனி மனிதர்கள் தம்மை தியானத்தின் மூலம் பிரக்ஞை மிக்கவர்களாக மாற்றிக்கொள்வது பலன்தரும் என்றே வைத்துக்கொள்வோம். ஆனால் அப்படி தனித்தனியாக மாறுவதை விட, புறச்சூழலில், அரசியலில், பொருளாதார உறவுகளின் மாற்றத்தில் ஏற்படும் மாறுபாடுகள் வேகமாக இம்மனவமைப்புக்களை மாற்றிவிடுகிறது. எடுத்துக்காட்டாக, ஆண்கள் தலைமுடியை வெட்டி "க்ரொப்" வைத்துக்கொள்வது ஒரு காலத்தில் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத மோசமான ஒன்றாகப்பார்க்கப்பட்டது. ஆனால் இன்று தனித்தனி மனிதர்கள் தம்மைப் பிரக்ஞை உள்ளவர்களாக மாற்றிக்கொள்ளாமலேயே தலைமுடிவெட்டுவது மிகச்சாதாரணமான விடயமாக மாறியிருக்கிறது.

பிரக்ஞை என்ற சொல்லை உங்கள் கருத்தியலுக்குப் பெயராக வைப்பதன் மூலம் உங்கள் கருத்தியல் பற்றிய முன்முடிவுகளையும் விளக்கப்போதாமைகளையும் ஏற்படுத்தி விடுகிறீர்கள். கருத்தியலை கருத்தியலாக மட்டுமே முன்வைக்கலாமே?

# உரையாடிகள்



புழுக்கம் தாங்கவில்லை என
சன்னல்களை திறக்க திறக்க
திரைகளில் அடர்கிறது
பல மூச்சுக் காற்றுகள்..

காற்றின் வாசனைகளால்
காதலிகளை அறிவதற்கு
கற்க வேண்டியுள்ளது நிறைய..

நெற்றிவகிடிலிருந்து உன்னை
இரண்டாக கிழிக்கத் துவங்கிய
எலிப்பல்லின் கூர் முனைப்பட்டு
கதறுகிறது உனது உதடுகள்.

உறவுக்கு தூரம் ஒரு பொருட்டல்ல என்றேன்
உணர்வுக்கு அது அவசியமில்லை என்றாய்
விரைப்புடனும்
வியர்வையுடனும்
எத்தனை நாளைக்கு?

பேச்சில் மைதூனம் என்றாலும்
அதுவும்
பேரின்பம்தானே என்றான்
என்னருகில் கிசுகிசுத்தப்படி
கணிப்பொறியில் கருத்தரித்த
பத்தொன்பதாவது சித்தன்.

**ஜமாலன்**

http://jamalantamil.blogspot.com/2008/06/blog-post_19.html

புரியாமல் எழுதுவது பற்றி...

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

எழுதப்படும் விடயங்கள் புரிந்துகொள்ளக் கடினமானவையாக இருக்கின்ற என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுத்தாளர்களின் மீது வைக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினையின் பல்வேறு பக்கங்களையும் ஆழமாக உரையாடுவதற்கான தலைப்பு இது.

இவ்வார உரையாடலுக்கான அடிப்படைகள் :

* எழுத்துக்கள் புரிவதில்லை என்ற குற்றச்சாட்டு
* மற்ற மொழிச்சூழல்களில் இக்குற்றச்சாட்டு.
* வாசகரதும் எழுத்தாளரதும் கண்ணோட்டத்தில் புரியாமல் இருப்பதற்கான காரணங்கள்
* வாசிப்பு எனும் உழைப்பு
* எழுத்தாளரது நோக்கம், அக்கறை, இலக்கு வாசகர்கள்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA